மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை : திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண்.221/2014
CNR.No.TNSA170000332014

கணேசன் --- வாதி

/இடையே/

மாதப்பன் ---பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 09.02.2022 ஆம் தேதியான இன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு வாதி தரப்பில் திரு.V.வைத்திலிங்கம், வழக்கறிஞர் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் திரு.P.சித்தன் வழக்கறிஞர் ஆஜராகியும், வா.சா.1-யை குறுக்கு விசாரணை செய்யாததால் பிரதிவாதி தோன்றாதரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை ஆய்வில் இருந்து வந்த மேற்படி வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

தாவா பி அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், பி அட்டவணை சொத்தை வாதிக்கு திரும்ப ஒப்படைக்க கோரியும், பி அட்டவணை சொத்தில் பிரதிவாதி வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதியை பிரதிவாதி இடித்து தர வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் நீதிமன்ற அமீன் மூலம் ஆக்கிரமிப்பை இடித்து தர செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

## 1) வாதி வழக்குரையின் சுருக்கம் :-

(i) தாவா சொத்து ஆதியில் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாகும். வாதி மற்றும் வாதியின் சகோதரர் முனுசாமிக்கும் இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டது. தாவா சொத்திற்கு வாதி பெயரில் பட்டா எண்.46 வழங்கப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் வாதியின் பெயரில் உள்ளது. தாவாசொத்திற்கு கந்தாயம்

முதலிய வரிகளை வாதி முறையாக செலுத்தி வருகிறார். தாவா சொத்தை பொறுத்து வாதியை தவிர வேறு எந்த நபருக்கும் உரிமையோ, உரிமை மூலமோ, அனுபவமோ, வேறு எவ்வித நலன்களோ இல்லை.

(ii) தாவா சொத்திற்கு அருகில் பிரதிவாதியின் நிலம் உள்ளது. பிரதிவாதி சுமார் 6 மாதங்களுக்கு முன்பு தாவா சொத்தை குறைந்த விலைக்கு கேட்டார். அதற்கு வாதி மறுத்துவிட்டார். அதன் காழ்ப்புணர்வு காரணமாக தாவாசொத்தில் தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்து வருகிறார்.

(iii) இந்நிலையில் பிரதிவாதியின் செயலை தவிர்க்க வேண்டி வாதி கடந்த 11.08.2014 ல் நில அளவையர் துணையுடன் தாவா சொத்தை சரியாக அளவு செய்து தாவா சொத்தின் எல்லைகளுக்கு முட்டுக்கல் பதித்து சென்றார். பிரதிவாதி எல்லைக்கற்களை அகற்றியும், வாதி, வாதியின் குடும்பத்தார் மற்றும் வாதியின் மருமகளையும் அடித்து காயம் ஏற்படுத்திவிட்டார். வாதியின் மகன் கடந்த 13.08.2014 ல் மேச்சேரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அந்த புகார் மனு ரசீது எண்.372/2014 ஆக மேச்சேரி காவல்நிலையத்தார் பதிவு செய்தனர். காவல்துறையினர் இரு தரப்பினரையும் விசாரித்து பிரதிவாதியை இது போன்ற செயல்களில் ஈடுபடக்கூடாது எனவும், அவ்வாறு மீறி நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்து அனுப்பினர்.

(iv) அதன்பின்னிட்டு பிரதிவாதி கடந்த 31.08.2014 ல் அவரது ஆட்களுடன் தாவாசொத்திற்குள் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து வாதியின் அமைதியான சுவாதீனத்தில் இடைஞ்சல்கள் செய்ய முயற்சித்தனர். பிரதிவாதியின் செயலை அருகில் உள்ளவர்களின் உதவியுடன் வாதி தடுத்துவிட்டார்.

(v) வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு இ.ம.எண்.1056/2014 ல் ஆணையாளர் நியமிக்கப்பட்டார். அவர் தாவாசொத்தை 16.09.2015 ல் தன்னுடைய அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்துள்ளார். அதன்பின்னர் தான் சர்வே எண்.31/2 ல் மொத்தம் 8.85 சென்ட் நிலத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளது வாதிக்கு தெரிய வந்தது.

எனவே பி அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும், சுவாதீன பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2) பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:–

(i) வழக்குரை சங்கதிகள் பொய்யானது. வழக்கு சொத்து ஆதியில் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக கூறுவது பொய்யாகும். வாதி வழக்கு சொத்தின் உரிமையாளர் என கூறுவதும் பொய்யாகும். 31.08.2014 ல் வாதியின் சுவாதீனத்தில் இடையூறு செய்ய முயற்சி செய்ததாக கூறுவது பொய்யாகும்.

(ii) கூனாண்டியூர் கிராமம் சர்வே எண்.88/4 ல் உள்ள 0.58 சென்ட் மற்றும் இதர சொத்துக்கள் பிரதிவாதியின் பெற்றோர்களான வெங்கடாஜலம் மற்றும் சித்தாயிக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி சித்தாயி மற்றும் வெங்கடாஜலம் ஆகியோரின் மகன்களான பிரதிவாதி மற்றும் ராஜமாணிக்கம் ஆகியோர் 24.12.2017 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். அதில் சர்வே எண்.88/4 ல் உள்ள 0.58 சென்ட் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் 0.13 1/4 மற்றும் 0.33 சென்ட் என இரண்டு தாக்குகள் உள்ளது. அதில் 25 சென்ட் கணேசன் நிலத்திற்கும் தெற்கு, ராஜமாணிக்கம் நிலத்திற்கும் தெற்கு, கோவிந்தன் நிலத்திற்கும் மேற்கு, பாதைக்கும் கிழக்கு என உள்ளது. ஆனால் பாகப்பிரிவினை நிலத்தில் 25 சென்டிற்கு பதிலாக 0.13 1/4 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை சாதகமாக எடுத்துக்கொண்ட வாதி பிரதிவாதியின் சொத்தில் உரிமை கோரி வருகிறார். சர்வே எண்.88/4 ல் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரதிவாதி கூறியுள்ளார்.

3) வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கடந்த 07.10.2016 ல் கீழ்க்கண்டவாறு எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. Whether the plaintiff is entitled for the relief of permanent injunction as prayed for?

2. Whether the plaintiff is in lawful possession and enjoyment of the suit property?

3. To what other relief?

4) திருத்தப்பட்ட வழக்குரையை பரிசீலனை செய்து கடந்த 17.03.2020ல் கீழ்க்கண்ட கூடுதல் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

1. Whether the plaintiff is entitled for the relief of declaration and possession with respect to B Schedule of property?
2. Whether the plaintiff is entitled for the relief of mandatory injunction?

5) எழுவினா 1, 2 மற்றும் கூடுதல் எழுவினா 1 மற்றும் 2

(i) இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி கணேசன் என்பவர் வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 7 மற்றும் நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) வாதி தரப்பில் தாவா சொத்து ஆதியில் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது எனவும், வாதி மற்றும் வாதியின் சகோதரர் முனுசாமிக்கும் இடையே ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டது எனவும், தாவா சொத்திற்கு வாதி பெயரில் வா.சா.ஆ.1 பட்டா வழங்கப்பட்டுள்ளது எனவும், தாவா சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் வாதியின் பெயரில் உள்ளது எனவும், தாவாசொத்திற்கு வா.சா.ஆ.5 முதல் 7 வரையிலான சான்றாவணங்களின் மூலம் வாதி வரி செலுத்தி வருகிறார் எனவும், எனவே வாதி தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் எனவும், நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட்ட போது தான் பிரதிவாதி வழக்கு பி அட்டவணை சொத்தை ஆக்கிரமிப்பு செய்தது என தெரியவந்தது எனவும், அந்த நீதிமன்ற ஆணையாளர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 எனவும், வரைபடம் நீ.ம.சா.ஆ.2 எனவும், அளவையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 எனவும், எனவே ஆக்கிரமிக்கப்பட்ட பி அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும், சுவாதீன பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) பிரதிவாதி தரப்பில் கூனாண்டியூர் கிராமம் சர்வே எண்.88/4ல் உள்ள 0.58 சென்ட் மற்றும் இதர சொத்துக்கள் பிரதிவாதியின் பெற்றோர்களான வெங்கடாஜலம் மற்றும் சித்தாயிக்கு பாத்தியப்பட்டது எனவும், சித்தாயி மற்றும் வெங்கடாஜலம்

ஆகியோர்களது மகன்களான பிரதிவாதி மற்றும் ராஜமாணிக்கம் ஆகியோர் 24.12.2017 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் எனவும், அதில் சர்வே எண்.88/4 ல் உள்ள 0.58 சென்ட் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது எனவும், அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் 0.13 1/4 மற்றும் 0.33 சென்ட் என இரண்டு தாக்குகள் உள்ளது எனவும், அதில் 25 சென்ட் கணேசன் நிலத்திற்கும் தெற்கு, ராஜமாணிக்கம் நிலத்திற்கும் தெற்கு, கோவிந்தன் நிலத்திற்கும் மேற்கு, பாதைக்கும் கிழக்கு என உள்ளது எனவும், ஆனால் பாகப்பிரிவினை நிலத்தில் 25 சென்டிற்கு பதிலாக 0.13 1/4 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், இதனை சாதகமாக எடுத்துக்கொண்ட வாதி பிரதிவாதியின் சொத்தில் உரிமை கோரி வருகிறார் எனவும், சர்வே எண்.88/4 ல் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை எனவும், எனவே வாதி கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கதக்கதல்ல என பிரதிவாதி கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது. ஆனால் பிரதிவாதி வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்யாமல் தோன்றாதரப்பினராக உள்ளதால் பிரதிவாதியின் மேற்படி கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) வாதியான வா.சா.1 வழக்குரையை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.1–ன் சாட்சியத்திலிருந்து வழக்கு சொத்து வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதும், வாதியும், வாதியின் சகோதரரும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் வழக்கு சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், அதனடிப்படையில் வா.சா.ஆ.1 வழங்கப்பட்டுள்ளதும், வாதி வா.சா.ஆ.3 முதல் 5 வரையிலான சான்றாவணங்களின் மூலம் வரி செலுத்தி வழக்கு சொத்தை அனுபவித்து வந்ததும் தெரிய வருகிறது. பிரதிவாதி தோன்றாதரப்பினராக உள்ளதால் வா.சா.1-ன் சாட்சியத்தை நிராகரிக்க எவ்வித முகாந்திரமும் காணப்படாததால் வா.சா.1 ன் சாட்சியம் ஏற்புடையது எனவும், வா.சா.1-ன் சாட்சியம் மற்றும் வழக்கு ஆவணங்களிலிருந்து வாதி வழக்கு சொத்தின் உரிமையாளர் என தெரிய வருவதால் வழக்கு ஏ அட்டவணை சொத்திற்குட்பட்ட பி அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என முடிவு செய்து வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் இ.ம.எண்.1056/2014 ல் நியமிக்கப்பட்டு அவர் தன்னுடைய அறிக்கை மற்றும் வரைபடம், அளவையரின் வரைபடம் ஆகியவற்றை நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்களாக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்களை பரிசீலனை செய்ததில் பிரதிவாதி வழக்கு சர்வே எண்.31/2 ல் 8.85 சென்டை ஆக்கிரமிப்பு செய்துள்ளது தெரிய வருகிறது. மேற்படி நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்ய பிரதிவாதிக்கு உரிய வாய்ப்பு வழங்கப்பட்டும் ஆட்சேபணை தாக்கல் செய்யாதது தெரிய வருகிறது. எனவே நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் ஏற்புடையது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vi) இந்நிலையில் மேற்படி நீதிமன்ற ஆணையாளரின் அறிக்கையின் பேரில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்த 8.85 சென்டில் உள்ள பிரதிவாதியின் வீட்டை இடித்து சுவாதீனம் அளிக்கக் கோரியும், சுவாதீன பரிகாரம் கோரியும், விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்கினை திருத்த இ.ம.எண்.1/2019 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேற்கண்ட பரிகாரங்கள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் பிரதிவாதி 8.85 சென்டை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என வழக்குரையையும் திருத்தியுள்ளது தெரிய வருகிறது. ஆனால் பிரதிவாதி தரப்பில் திருத்தப்பட்ட வழக்குரையை மறுக்கும் விதத்தில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. எனவே வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை ஒப்புக்கொண்டுள்ளதால் தான் பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்பது தெரிய வருகிறது. இந்நிலையில் வழக்குரையிலிருந்தும், வா.சா.1–ன் சாட்சியத்திலிருந்தும், நீ.ம.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்களிலிருந்தும் வழக்கு பி அட்டவணை சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளது தெரிய வருவதால் பி அட்டவணை சொத்தின் உரிமையாளரான வாதி கோரிய சுவாதீன பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vii) வாதி தரப்பிலேயே பி அட்டவணை சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளதால் பி அட்டவணை சொத்தில் வாதி சுவாதீனத்தில்

இல்லை எனவும், பி அட்டவணை சொத்தை தவிர்த்த இதர சொத்துக்களில் வாதி சுவாதீனத்தில் உள்ளதால் பி அட்டவணை சொத்தை தவிர்த்த இதர சொத்துக்களில் வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற உரிமையுடையவர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6) எழுவினா 3

எழுவினா 1 மற்றும் 2, கூடுதல் எழுவினா 1 மற்றும் 2 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல எனவும் வாதி செலவுத்தொகை பெற உரிமையுடையவர் எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, தாவா பி அட்டவணை தவிர்த்த இதர வழக்கு சொத்துக்களில் வாதியின் சுவாதீனத்தை பிரதிவாதியோ அவருடைய ஆட்களோ இடையூறு செய்யக்கூடாது என நிரந்தரமாக தடையுறுத்தி வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது எனவும், தாவா பி அட்டவணை சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது எனவும், பி அட்டவணை சொத்தை வாதிக்கு திரும்ப ஒப்படைக்க கோரிய சுவாதீன பரிகாரமும் வாதிக்கு கிடைக்கதக்கது எனவும், பி அட்டவணை சொத்தில் பிரதிவாதி வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதியை பிரதிவாதி இடித்து தர வேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் முன்னிலையில் நீதிமன்ற அமீன் மூலம் ஆக்கிரமிப்பை இடித்து தர வாதி கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என இவ்வழக்கு பகுதியாக செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. பிரதிவாதி ஆக்கிரமிப்புகளை அகற்றி வாதிக்கு சுவாதீனம் அளிக்க ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா.1 கணேசன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| வரிசை எண் | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.10.2010 | பட்டா எண்.46 | கணிணி நகல் |
| வா.சா.ஆ.2 | – | டிஸ்ஜார்ஜ் சம்மரி (இந்திராணி) | அசல் |
| வா.சா.ஆ.3 | 13.08.2014 | மேச்சேரி காவல்நிலையத்தில் வாதியின் மகன் கொடுத்த புகார் மனு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 14.08.2014 | புகார் இரசீது | அசல் |
| வா.சா.ஆ.5 | 27.03.1993 | கந்தாய இரசீது | அசல் |
| வா.சா.ஆ.6 | 27.12.2000 | கந்தாய இரசீது | அசல் |
| வா.சா.ஆ.7 | 13.04.2007 | கந்தாய இரசீது | அசல் |

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>

| வரிசை எண் | தேதி | ஆவணம் | தன்மை |
|---|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 09.12.2015 | ஆணையாளர் அறிக்கை | அசல் |
| நீ.ம.சா.ஆ.2 | 09.12.2015 | ஆணையாளர் வரைபடம் | அசல் |
| நீ.ம.சா.ஆ.3 | 09.12.2015 | சர்வேயர் வரைபடம் | அசல் |

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.